## 10

# மாதிரியில் இரட்சிப்பைப் பற்றிய ஒரு நினைவுகூருதல் தேவைப்பட்ட ஒரு சபை

## (1 கொரிந்தியர் 10:1-14)

*1 கொரிந்தியர் 8-10, அதிகாரங்களில் பவுல், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுதல் பற்றிய ஒரு கேள்விக்குப் பதில் அளிப்பதில் ஒரு நீண்ட பகுதியை உள்ளடக்கினார் (8:1). அந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் அளித்த பின்பு அவர், மற்றவர்கள் இரட்சிக்கப் பட்டிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதன் அவசியத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்யும் உதாரணமாக தம்மையே பயன்படுத்தினார். மற்றவர்கள் இடறுதலுக்குக் காரணமாகும் என்றால் அவர் அப்படிப்பட்ட உணவை முற்றிலுமாகத் தவிர்ப்பார் (8:13). அடுத்ததாக, அவர் அனேகமாக விக்கிரக ஆராதனையுடன் எவ்வகையிலும் தொடர்பு கொண்டிருத்தலின் அபாயங்களைக் காண்பிப்பதற்காக, வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் உதாரணத்தைக் கொடுத்தார் (10:1-14).*

இவ்வசனப் பகுதி ஒரு பரந்த நடைமுறைப் பயன்பாட்டையும் கொண்டிருக்க முடியும். பவுல், இஸ்ரவேல் மக்களின் அனுபவத்தை கொரிந்தியர்களின் அனுபவத்துடன் - மற்றும், எனவே கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது சொந்த அனுபவத்துடன் - ஒப்பிடும் ஒரு விளக்கவுரைப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். இஸ்ரவேல் மக்களின் விடுதலை மற்றும் [வனாந்தரத்தில்] அலைந்துதிரிதல் ஆகியவை, நமது இரட்சிப்பிற்கு ஒரு மாதிரியை அல்லது பிரதிநிதித்துவத்தை அளிக்கின்றன. மாதிரியை எதிர்மாதிரியுடன் - அவர்களின் இரட்சிப்பை நமது இரட்சிப்புடன் - ஒப்பிடுதலினால் நாம், சில முக்கியமான பாடங்களைக் கற்றறிய முடியும். இவ்விரு இரட்சிப்புக்களும் எவ்வாறு ஒன்றுபோல் உள்ளன?

## இரண்டு இரட்சிப்புகளும் ஒரு ஞானஸ்நானத்துடன் தொடங்குகின்றன

**இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்பு**

*அடிமைத்தனை.* இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்பின் வரலாறு அடிமைத்தனையின் வரலாறாக உள்ளது. இஸ்ரவேல் மக்களைத் தேவன் விடுவிக்கத் தீர்மானிக்கும் வரையிலும், அவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தனர். பின்பு தேவன் அவர்களின் விடுதலையாளராக மோசேயை

அனுப்பினார், மற்றும் மோசேயின் மூலமாகத் தேவன், எகிப்தின்மீது பத்து வாதைகளை வரச்செய்து, தேவனுடைய மக்கள் கிளம்பிச் செல்வதற்குப் பார்வோன் அனுமதிக்கக் காரணமானார்.

*இரத்தம்.* முதல் பிறந்த பிள்ளைகளின் மரணம் என்ற பத்தாவது வாதையின் போது, இஸ்ரவேல் மக்கள், பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளித்ததினால் அந்த வாதையின் செயல்விளைவுகளில் இருந்து தப்புவிக்கப் பட்டனர். பின்பு பார்வோன், இஸ்ரவேல் மக்கள் தேசத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லுமாறு கூறினார்.

இருப்பினும், அவர்கள் வெகு தொலைவிற்குச் செல்லும் முன்பே, பார்வோன் தமது மனதை மாற்றிக்கொண்டு, அவர்களைத் திரும்பக் கொண்டுவருவதற்குத் தமது இரதங்களை அனுப்பினார். இஸ்ரவேல் மக்கள் உலர்ந்த தரையின் மூலமாக செங்கடலைக் கடந்து செல்லக்கூடும்படிக்கு, செங்கடலின் தண்ணீரை இரண்டாகப் பிரித்ததன் மூலம் தேவன் இன்னொரு அற்புதத்தை நிகழ்த்தினார். அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல எகிப்தியர்கள் முயற்சி செய்தபோது, கடல் திரும்ப ஒன்றுகூடி அவர்களை மூழ்கடித்தது. செங்கடலின் கிழக்குக் கரையில் இஸ்ரவேல் மக்கள் நின்றபோது தான் அவர்கள் கடைசியாகத் தங்கள் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப் பட்டனர்.

*ஞானஸ்நானம்.* இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணம் ஒரு ஞானஸ்நானத்துடன் தொடங்கியது என்று வசனப்பகுதி குறிப்பிடுகிறது; எகிப்திய அடிமைத்தளையில் இருந்து மீட்கப் பட்டவர்கள் "எல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (10:1ஆ, 2). ஆகையால் இஸ்ரவேல் மக்களின் மீட்பின் வரலாறு, அடிமைத்தளை, இரத்தம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றைப் பற்றியதாக உள்ளது. அவர்கள் கடைசியாக ஞானஸ்நானம் பெற்றபோது - அவர்களின் இருபுறத்திலும் கடலும் அவர்களுக்கு மேலாக மேகமும் சூழ்ந்திருக்க முழுக்காட்டப்பட்டபோது - மட்டுமே, அவர்கள் பார்வோனின் அடிமைத்தளையில் இருந்து மீட்கப்பட்டனர்.

### நமது இரட்சிப்பு

கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்ற வேளையை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காகப் பவுல், இஸ்ரவேல் மக்களின் மீட்டைப் பற்றி இந்த வார்த்தைகளில் விவரித்தார் என்பதில் சந்தேகம் இல்லை. நமது பயணமும் ஞானஸ்நானத்துடன் தொடங்குகிறது.

*அடிமைத்தளை.* இஸ்ரவேல் மக்களைப் போன்று நாம் - பாவம் மற்றும் சாத்தான் ஆகியவற்றிற்குள் - அடிமைத்தளையில் இருந்தோம் (யோவான் 8:34; ரோமர் 6:17, 18). இதன் விளைவாக, நாம் நமது பாவங்களில் மரித்து கிறிஸ்துவினிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, நம்பிக்கையும் தேவனும் இல்லாதவர்களாக இருந்தோம் (எபேசியர் 2:1, 12).

*இரத்தம்.* மற்றொரு ஒற்றுமையில், நம்மை விடுவிப்பதற்கு இரத்தம் சிந்தப்பட்டது - அது "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியின்" இரத்தமாகும் (யோவான் 1:29). சிலுவையில் கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் மூலமாக, "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே

*இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபேசியர் 1:7).*

*ஞானஸ்நானம். மீண்டும் ஒருமுறை நாம், இஸ்ரவேல் மக்களைப் போன்றவர்களாக இருக்கிறோம்; ஏனெனில் நாம், தண்ணீருக்குள் கடந்து சென்ற வரையிலும் - நாம் தண்ணீருக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட, முழுக்காட்டப்பட்ட வேளை வரையிலும் - பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து தப்பிக்கவில்லை. அந்த வேளையில், நாம் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொண்டோம் (நடபடிகள் 2:38), நமது பாவங்கள் கழுவப்பட்டன (நடபடிகள் 22:16), மற்றும் நாம் இரட்சிக்கப் பட்டோம் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21). இஸ்ரவேல் மக்களைப் போல் நாம், "மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற" வில்லை; அதற்குப் பதிலாக நாம், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் (ரோமர் 6:3). அவர் நம்மை விடுவிப்பவராக, நமது மீட்பராக மற்றும் நமது கர்த்தராக இருக்கிறார்.*

*நமது இரட்சிப்பு, அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்புக்கு இணையானதாக உள்ளது; நம்மை விடுவிப்பதற்கு இரத்தம் சிந்தப்பட்டது; பின்பு நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம். நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, பாவத்தின் அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப்பட்டோம்.*

## இரண்டு இரட்சிப்புகளும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு நாட்டை நிறைவாகக் கொண்டிருந்தன

### இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு

*இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, அவர்கள் வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகளைச் செலவிட்ட பின்பு, நிறைவாக அவர்கள், தங்களுக்குத் தேவன் வாக்களித்திருந்த நாடாகிய கானானுக்குள் பிரவேசிப்பதற்கு, யோர்தான் நதியைக் கடந்து சென்றனர்.*

### நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாடு

*இஸ்ரவேல் மக்களைப் போன்று, நமது பயணமும் பரலோகம் என்ற "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில்" நிறைவடைகிறது.[1] பரலோகத்திற்குள் நமது பிரவேசத்தை, கானானுக்குள் இஸ்ரவேல் மக்களின் பிரவேசத்துடன் (அல்லது கிறிஸ்தவர்கள் மரணத்தில் யோர்தானைக் கடத்தலுடன்) புதிய ஏற்பாடு குறிப்பாக ஒப்பிடாவிட்டாலும், நாம் பாடுகிற சில பாடல்கள் இந்த இரு நிகழ்ச்சிகளையும் ஒன்றிணைக்கின்றன.*

*கானானுக்குள் இஸ்ரவேல் மக்களின் பிரவேசமும் பரலோகத்திற்குள் நமது பிரவேசமும் பல வழிகளில் ஒப்பிடப் படுபவைகளாக உள்ளன. (1) இவை இரண்டுமே, தேவனுடைய மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகின்றன (காண்க - யோவான் 14:1-3). (2) இவை இரண்டுமே அவற்றில் பிரவேசிப்பவர்களுக்கு இளைப்பாறுதலை உள்ளடக்கி இருக்கின்றன (காண்க மத்தேயு 11:28-30; வெளிப்படுத்தின விசேஷம் 14:13; ஒப்பிடுக எபிரெயர்*

*4:9-11). (3)* இவை இரண்டுமே, வளம் மிகுந்த நாட்டில் வாழ்வதை உள்ளடக்கி இருக்கின்றன (காண்க - யாத்திராகமம் 3:8; எண்ணாகமம் 13:27; ஒப்பிடுக வெளிப்படுத்தின விசேஷம் 22:1, 2). நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள அந்த நாட்டின் அழகும் ஆசீர்வாதங்களும் அதை நோக்கி நம்மை இழுக்கும் ஒரு காந்தம் போன்று இருக்க வேண்டும்.

## இரண்டு இரட்சிப்புகளும் வனாந்தர வாசத்தின் காலத்தில் உண்மைத்தன்மையை உள்ளடக்குகின்றன

இஸ்ரவேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் இருந்தனர். இந்த வனாந்தர வாசத்தின் காலத்தைப் பவுல், சபையில் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் செலவிடும் காலத்துடன் - அது எவ்வளவு நீண்ட காலமாக இருந்தாலும் அதனுடன் - ஒப்பிட்டார். ஒரு வேளை அவர், அவர்களின் வனாந்தர வாசம் சோதித்தலை உள்ளடக்கி இருந்தது போன்றே நமது காலமும் அதை உள்ளடக்கி இருக்கிறது என்பதை மறைமுகமாகக் குறிப்பிட விருப்பநோக்கம் கொண்டிருக்கலாம். கிறிஸ்தவ வாழ்வு என்பது சோதனையின் காலமாக உள்ளது.

### வனாந்தரத்தில் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டிருத்தல்

*இஸ்ரவேல் மக்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள்.* இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் செலவிட்ட காலத்தின்போது, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்கள் தாக்கப்பட்டபோது தேவன் அவர்களைக் காப்பாற்றினார் மற்றும் அவர்களின் பயணம் முழுவதிலும் அவர்களுக்கு வழிகாட்டுதலை அளித்தார். 10:3, 4ல் பவுல், அவர்களுக்குத் தேவன் உணவும் தண்ணீரும் கொடுத்தார் என்று குறிப்பாகக் கூறினார்: "எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்.[2] எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே." [3] இஸ்ரவேல் மக்கள் பசியாக இருந்தபோது, அவர்களுக்குத் தேவன் எவ்வாறு மன்னாவையும் காடைகளையும் அளித்தார் (யாத்திராகமம் 16) மற்றும் அவர்கள் தாகமாக இருந்தபோது, அவர்களுக்கு கன்மலையில் இருந்து தண்ணீரை எவ்வாறு அளித்தார் (யாத்திராகமம் 17; எண்ணாகமம் 20) என்பவற்றைப் பற்றிய வரலாறுகளைப் பழைய ஏற்பாடு கூறுகிறது. "அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்ற பவுலின் கூற்றானது, வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வதிக்கப் பட்டதன் வழிமுறையாக - தேவனுடைய குமாரனாகிய, தேவத்துவத்தில் இரண்டாம் நபரான - கிறிஸ்து இருந்தார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

*நமது ஆசீர்வாதங்கள்.* வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டதுபோல்; நாம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். அவர்கள் "ஒரே ஞான போஜனத்தைப் புசித்தனர்" மற்றும் "ஒரே ஞானபானத்தைப் பருகினர்" என்பது "நம்முடையவற்றைப் போன்ற ஒன்றையே" என்று அர்த்தப்படலாம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பது போன்றே - ஒரே வகையான ஆவிக்குரிய போஷணையைக் கொண்டு - அவர்களையும்

ஆசீர்வதித்தார்.

இன்றைய நாட்களில் ஆவிக்குரிய உணவினால் ஆசீர்வதிக்கப் பட்டிருத்தல் பற்றி நாம் நினைக்கும்போது, கிறிஸ்து "ஜீவ அப்பமாக" இருக்கிறார் (யோவான் 6:35) மற்றும் அவர் நமக்கு "ஜீவ தண்ணீரை" தருகிறார் (யோவான் 4:10) என்பவற்றை நாம் நினைவுகூருகிறோம். இத்துடன் கூடுதலாக நாம் ஆவிக்குரிய வகையில் வளரும்படி "வசனம் என்ற பாலை" பெற வழிகொண்டவர்களாக இருக்கிறோம் (1 பேதுரு 2:2).[4] கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் மேலும் பிற ஆசீர்வாதங்களையும் பெறுகிறோம்.

**இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாதிருந்தனர்**

இருப்பினும், வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் இருந்த காலத்தின் போது அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தனர். இஸ்ரவேல் மக்களில் பெரும்பான்மையானவர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கவில்லை என்பதே பிரச்சனையாக இருந்தது. பவுல், "அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்" என்று கூறினார் (10:5). இவ்வசனத்தில் "அதிகமானபேர்களிடத்தில்" என்ற வார்த்தை, பவுல் கூறியிருந்ததற்கு நேர்மாறானதாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் "எல்லாரும்" என்பதைப் பற்றி அவர் ஐந்து முறைகள் பேசியிருந்தார்: அவர்கள் "எல்லாரும்" மேகத்தின் கீழாக இருந்தனர், செங்கடலக் கடந்தனர், ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். ஆவிக்குரிய உணவை உண்டிருந்தனர் மற்றும் ஆவிக்குரிய பானத்தைப் பருகியிருந்தனர். இருப்பினும் அவர்களில் "அதிகமானபேர்கள்" தேவனைப் பிரியப்படுத்தத் தவறியிருந்தனர். என்ன ஒரு கீழான கூற்று! இஸ்ரவேல் மக்களினத்தில் ஏறக்குறைய எல்லாரும் பாவம் செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாமல் இருந்ததன் மூலம் தண்டிக்கப் பட்டிருந்தனர்.

"அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது" (10:6).[5] பாவங்களின் அதே வகைகளினால் நாமும் குற்றப்பட்டிருக்க முடியும் என்று பவுல் கூறினார்! ஆகையால் நாம் அவற்றைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! இஸ்ரவேல் மக்கள் செய்திருந்ததும் ஆனால் நாம் செய்யாது இருக்க வேண்டியதுமான நான்கு "பொல்லாத விஷயங்கள்" பற்றிப் பவுல் குறிப்பாகப் பேசினார்.

(1) *விக்கிரக ஆராதனை:* "அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்" (10:7). மோசே மலையின்மீது தேவனிடத்தில் இருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்டிருக்கையில், இஸ்ரவேல் மக்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியைச் செய்து அதை ஆராதித்தனர். (காண்க - யாத்திராகமம் 32.) இதன் விளைவாக, லேவியர்களால் பலர் கொல்லப்பட்டனர் மற்றும் பிறர் ஒரு வாதையினால் இறந்தனர்.

(2) *ஒழுக்கவீனம்:* "அது போல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக" (10:8). மோவாபியப் பெண்களுடன் இஸ்ரவேல் மக்கள் வேசித்தனம் செய்த நிகழ்ச்சி பற்றி நாம் எண்ணாகமம் 25ல்

வாசிக்கிறோம். அதன் விளைவு என்னவாக இருந்தது? ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தனர்![6]

(3) *கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்தல்:* "அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக" (10:9). பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த குறிப்பான சந்தர்ப்பம் எண்ணாகமம் 21:5ல் காணப்படுகிறது: "ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்." என்ன நடந்தது? "அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்" (எண்ணாகமம் 21:6).

(4) *முறுமுறுத்தல்:* "அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்" (10:10). கோரா, தாத்தான் மற்றும் அபிராம் ஆகியோர், மோசே மற்றும் ஆரோன் ஆகியோரின் நடத்துவத்துவத்திற்கு எதிராகக் கலகம் ஒன்றை வழிநடத்திய நிகழ்ச்சியைப் பவுல் குறிப்பிட்டிருக்கலாம், இந்தக் கலகத்தின் விளைவாக, அவர்களும் கலகத்தில் பங்கேற்ற மற்றவர்களும் தேவனுடைய செயல்களினால் கொல்லப்பட்டனர். கலகத்தை நடத்தியவர்கள் குடும்பங்களைப் பூமியானது விழுங்கிற்று, கலகம் செய்த மற்ற லேவியர்களை வானத்தில் இருந்து வந்த அக்கினி பட்சித்தது மற்றும் அவர்களைப் பின்பற்றிய 14,000க்கும் மேற்பட்டவர்களை ஒரு வாதை அழித்தது (எண்ணாகமம் 16).

### இஸ்ரவேல் மக்கள் செய்தது போல கிறிஸ்தவர்கள் கீழ்ப்படியாமல் இருக்கக் கூடாது

இஸ்ரவேல் மக்கள் செய்த பாவங்களின் அதே வகையினால் கொரிந்தியர்கள் குற்றப்பட்டிருக்க முடிந்திருந்தது, அதேபோன்று நாமும் இருக்கக்கூடும்.

(1) நாம் *விக்கிரக ஆராதனையினால்* குற்றப்பட்டிருக்க முடியுமா? நாம் எப்போதாவது தேவனைக் காட்டிலும் முன்னிடத்தில் பணத்தை அல்லது விளையாட்டுகளை அல்லது இன்பங்களை வைக்கிறோமா? தேவனையும் அவரது ஊழியத்தையும் காட்டிலும் முன்னிடத்தில் வேறு எதையாவது நாம் வைக்கும் போதெல்லாம், அதை நாம் நமது விக்கிரகம் ஆக்குகிறோம்.

(2) நாம் - வேசித்தனம் அல்லது விபசாரம் என்ற - *ஒழுக்கவீனத்தினால்* குற்றப்பட்டிருக்க முடியுமா? நாம் மாம்சத்தை உடையவர்களாக உண்டாக்கப் பட்டிருப்பதால், மனிதர்கள் எப்போதும் ஆளாகியிருந்திருக்கக் கூடிய அதே சோதனைகளுக்கு நாமும் ஆளாகியிருக்கிறோம், மற்றும் நாம் மக்கள் ஒழுக்கவீனமாக நடந்துகொள்ளும்படி தொடர்ந்து சோதிக்கப்படும் ஒரு உலகத்தில் வாழ்கிறோம். ஒழுக்கவீனத்தில் ஈடுபடும்படி கிறிஸ்தவர்கள் சோதிக்கப்பட முடியுமா? ஜிம்மி ஆலென் அவர்களின் விளக்கம் திரும்பக்கூறப்படத் தகுதியானதாக உள்ளது: "பாலுறவுரீதியாகத் தாம் சோதிக்கப்பட இயலாது என்று கூறும் நபர், தமது உணர்வுகள் எழுப்பப்பட்டிராத அளவுக்கு மிகவும் இளையவராக இருக்கிறார், என்ன நடக்கிறது என்று தாம் அறியாத அளவுக்கு ஒன்றும் அறியாதவராக இருக்கிறார், ஏற்கனவே கீழ்ப்படுத்தி இருக்கும் அளவுக்கு

*அவர்கள் முதியவர்களாக இருக்கின்றனர், சாதாரணமானவர்களாக அவர்கள் இருப்பதில்லை அல்லது அவர்கள் பொய்கூறுகின்றனர்.''*[7]

*(3)* நாம் *கர்த்தரைப் பரீட்சை பார்க்கும்* குற்றப்பட்டிருக்க முடியுமா? நமது நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் குறைவினால் அவரது பொறுமையை நாம் சோதிக்கும்போதெல்லாம், நாம் அவரைப் பரீட்சை பார்க்கிறோம்; கீழ்ப்படியாமைக்குத் தண்டனை தர அவர் உண்மையில் தமது அச்சுறுத்தல்களைச் செயல்படுத்துவார் என்பதை விசுவாசியாதவர்கள் போல நாம் செயல்படுகிறோம்.

*(4)* நாம் தேவனுக்கு விரோரதமாக *முறுமுறுத்தல்* அல்லது முறையிடுதலினால் குற்றப்பட்டிருக்க முடியுமா? நமது முறையிடுதல்கள் பற்றி, நமக்கு அவர் செய்துள்ளவற்றிற்கு நமது நன்றி உணர்வில் குறைபாடு மற்றும் நமக்கும் அவரது ஊழியத்திற்கும் மிகச்சிறந்தவற்றையே அவர் செய்வார் என்பதில் நம்பிக்கைக் குறைபாடு ஆகியவற்றிற்குச் சாட்சியம் தருவதாகக் காணப்படும் நமது நிலையான நழுவுதல் பற்றி தேவன் என்ன நினைக்கிறார்?

ஆம், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், இஸ்ரவேல் மக்களில் அதிகமானவர்களின் அழிவிற்குக் காரணமாயிருந்த அதே பாவங்களினால் குற்றப்பட்டிருக்க முடியும். மற்ற ஏராளமான பாவங்களினாலும் நாம் குற்றப்பட்டிருக்க முடியும். இஸ்ரவேல் மக்களைப் போன்றே கிறிஸ்தவர்கள் பாவத்தில் தொடர்ந்து நின்றால், விளைவு என்னவாக இருக்கும்? இஸ்ரவேல் மக்களின் பாவங்களும் அவர்களின் பாவத்திற்காகத் தேவன் கொடுத்த தண்டனைகளும் நமக்கு உதாரணங்களாக உள்ளன மற்றும் ''நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது'' (10:11) என்று பவுல் கூறினார். இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் விழுந்தது போன்றே, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் ஒப்புவமையான வனாந்தரத்தில் விழக்கூடும்; அவர்கள் பாவத்தில் நிலைநிற்கக் கூடும், அதன் விளைவாகத் தங்கள் ஆத்துமாக்களை இழந்து போகக் கூடும். இங்கு பவுல், விசுவாச விலக்கத்தின் சாத்தியக்கூறு பற்றி - கிறிஸ்தவர்கள் புறம்பே விழுந்துபோய் நித்தியத்திற்கும் இழந்துபோகப்படக்கூடும் என்ற உண்மை நிலை பற்றி - போதித்தார். ஆகையால் நாம் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள நாட்டிற்குள் நாம் பிரவேசிப்பதைத் தடைசெய்யும் பாவங்களைத் தவிர்க்கக் கடவோம்.

## முடிவுரை

12 மற்றும் 13 ஆகிய வசனங்களில் இந்தப் பாடத்திற்கான முடிவைப் பவுல் தாமே அளித்தார். அவர் ஒரு எச்சரிக்கையையும் வாக்குறுதியையும் கொடுத்தார்.

முதலாவது, 12ம் வசனத்தில் நாம் எச்சரிக்கையைக் காண்கிறோம்: ''இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.'' கொரிந்தியர்கள், மட்டுமீறிய நம்பிக்கை என்ற அபாயத்தில் இருந்தனர். அவர்கள் தங்களின் நித்திய இரட்சிப்பு நிச்சயமானது என்று நினைத்தனர்; ஆகையால் அவர்கள் தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அளவுக்கு இராதிருந்தனர். மட்டுமீறிய நம்பிக்கையுடன் ஒரு விளையாட்டுக்குழு விளையாடச் செல்லும்போது, அந்தக் குழு ஜாக்கிரதை

இன்றி இருப்பதற்கும் தோல்வி அடைவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. அபாயமான தொழில்களில் ஈடுபடும் மக்கள் எப்போதுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; அவர்கள் தங்களால் தவறு செய்ய முடியாது என்று நினைக்கும்போது, அவர்கள் தங்களையோ அல்லது பிறரையோ காயப்படுத்திக் கொள்வதற்கும் மரணத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மாபெரும் அபாயத்தில் உள்ளனர். ஆகையால் நாம், பவுல் அறிவுறுத்துதலை எடுத்துக் கொள்வோமாக. நாம் புறம்பே விழுந்து போய்விடாமலும் நமது ஆத்துமாக்களை நித்தியத்திற்கும் இழந்து போய்விடாமலும் இருக்கும்படி, தொடர்ந்து எச்சரிக்கையாகவும் வைராக்கியமாகவும் இருப்போமாக.

இந்தப் பகுதியைப் பவுல், ஒரு வாக்குறுதியுடன் முடித்தார்: "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (10:13). நாம், பாவம் செய்யாதபடி எச்சரிக்கையாக இருப்பது அவசியம் என்றிருக்கும் வேளையில், பாவம் செய்தல் தவிர்க்க இயலாததாக உள்ளது என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் தனிப்பட்ட அல்லது சகிக்க இயலாத வகையில் சோதிக்கப்பட மாட்டோம், ஆனால் மனித குலத்திற்குப் போதுவானவைகளாக உள்ள வழிகளிலேயே சோதிக்கப்படுவோம் என்று தேவன் நமக்கு உறுதி அளித்திருக்கிறார். எதிர்த்து நிற்கும் நமது திறனுக்கு மேலான வகையில் நாம் சோதிக்கப்படுவதை அவர் அனுமதிக்க மாட்டார், ஆனால் சோதனையின் ஒவ்வொரு வழியிலும் நாம் தப்பிக்கொள்ளும்படியான போக்கை அவர் அளிப்பார். சோதனையை எதிர்த்து நிற்குதலுக்கான மற்றும் விழுந்து போகாது இருப்பதற்கான நமது திறனுக்கு நாம், முதலாவது மற்றும் முற்றிலும் முதலாவதாக, தேவனையும் அவரது அளிப்புகளையும் சார்ந்திருக்க வேண்டும். அவர் உண்மையுள்ளவராக இருப்பதால் நாம் அவர்மீது நம்பிக்கை வைக்க முடியும். இருப்பினும் அது நம்மைச் சார்ந்ததாகவும் உள்ளது. தப்பிக்கொள்ளும்படியான போக்கைத் தேவன் ஏற்படுத்துகிறார், ஆனால் நாம் அதை நமக்கு பயனுள்ளதாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; நாம் தப்பிக்கொள்ளுதலைச் செய்ய வேண்டும்.[8] தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தரப்பட்ட நிலையில் நாம் பாவம் செய்வதைத் தவிர்க்க முடியும். நாம் பாவம் செய்தால், அது தேவனுடைய தவறு அல்ல; நாம் நம்மைத்தான் குற்றப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

---

குறிப்புகள்

[1]நாம் மரித்து நியாயத்தீர்ப்புக்குப் பின்பு பரலோகம் சென்றாலும் அல்லது நாம் உயிரோடு இருக்கையிலேயே கிறிஸ்து திரும்பி வந்து நாம் "மறுரூபமாக்கப்பட்டு" (1 கொரிந்தியர் 15:51) அடுத்ததாக நியாயத்தீர்ப்பை அனுபவித்து பின்பு பரலோகத்திற்குச் சென்றாலும், இந்தக் கூற்று உண்மையானதாகவே உள்ளது. [2]உணவு மற்றும் பானம் ஆகியவற்றின் ஆதாரமூலம் ஆவிக்குரியதாக இருந்தது என்ற கருத்தில் அவைகள் "ஆவிக்குரியவைகளாக" இருந்தன; அவைகள் இயற்கையான வழிமுறைகளில் பெற்றுக்கொள்ளப் பட்டவையாக இருந்தன என்பதற்கு மாறாக அவைகள் தேவனால்

*தரப்பட்டவையாக இருந்தன.* [3]*"அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலை" என்பதைப் பற்றிப் பேசியதில் பவுல், இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் இருந்த அவர்களின் ஆண்டுகளின்போது, கிறிஸ்து அவர்களுடன் கூட இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பித்தார். மேலும் தேவன் "இஸ்ரவேல் மக்களின் கன்மலை" என்ற வகையில் குறிப்பிடப் பட்டுள்ளார் (காண்க உபாகமம் 32:4, 15, 18; ஏசாயா 17:10; 26:4).* (David Lipscomb, *A Commentary on the New Testament Epistles*, vol. 2, *First Corinthians*, ed J. W. Shepherd [Nashville: Gospel Advocate Co., 1935; reprint; 1960], 146.) [4]*இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் அளித்த "ஆவிக்குரிய உணவு" மற்றும் "ஆவிக்குரிய பானம்" ஆகியவற்றை, கிறிஸ்தவ யுகத்தில் கர்த்தருடைய பந்திக்கு ஒப்புவமை என்ற வகையில் பல விளக்கவுரையாளர்கள் காணுகின்றனர்.* Jimmy Allen, *Survey of First Corinthians,* 3d ed. (Searcy, Ark.: By the Author, 1989), 118 *என்ற புத்தகத்தில் முன்வைக்கப்பட்ட கருத்தாக உள்ளது.* [5]*"தேவன் தராமல் வைத்திருந்தவற்றை இஸ்ரவேல் மக்கள் இச்சித்தனர் மற்றும் அவர் அளித்தவற்றைப் பற்றி முறுமுறுத்தனர் (எண்ணாகமம் 11:4, 33, 34)"* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati, Ohio: Standard Publishing Foundation, n.d.], 100). [6]*பவுல் "ஒரே நாளில் 24,000 பேர் விழுந்துபோனார்கள்" என்று கூறினார். இருப்பினும் எண்ணாகமம் 25:9ம் வசனம், "அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம்பேர்" என்று கூறுகிறது. எண்ணாகமம் 25ல் பதிவுசெய்யப்பட்ட நிகழ்ச்சியைப் பவுல் குறிப்பிடவில்லை, ஆனால் யாத்திராகமம் 32:25ல் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியை அவர் குறிப்பிட்டார் என்று கிளேஸன்* L. *ஆர்ச்சர் அவர்கள் மனநிறைவடைந்தார், மற்றும் அந்த வேளையில் கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையைப் பவுல் நமக்குத் தகவல் அளித்தார்: 23,000.* (Gleason L. Archer, *Encyclopedia of Bible Difficulties* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1982], 401.) [7]Allen, 120. [8]George W. DeHoff, *Sermons on First Corinthians* (Murfreesboro, Tenn.: Christian Press, 1947), 84.